# புதுவை அரசு
# மின்துறை
-oOo-

***சிறு விவசாய மின் நுகர்வோர்களின் கவனத்திற்கு***

*மின்சார பங்கீட்டை முறைப்படுத்தி வழங்குவதற்கும், உரிய விலையில் விற்பனை செய்வதற்கும், இந்திய மின்சாரச் சட்டம் 2003-ன் கீழ் கோவா மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வாணையத்திடம் புதுவை அரசு மின்துறை 2009-2010 ஆம் நிதி ஆண்டிற்கான மொத்த கூட்டு வருவாய் தேவை மற்றும் மின் கட்டண விண்ணப்பம் தாக்கல் செய்துள்ளது. மின் கட்டண சலுகை அளிப்பது சம்பந்தமாக புதுவை யூனியன் பிரதேசத்தில் சிறு விவசாயிகள் திட்டத்தின் கீழ் மின் இணைப்பு பெற்றுள்ள பயனாளிகள், தாங்களாகவே முன்வந்து சம்பந்தப்பட்ட இயக்கம் மற்றும் பராமரிப்பு இளநிலைப்பொறியாளர் அலுவலகத்தை நாடிச்சென்று, தாங்கள் பெற்றுள்ள சிறு விவசாய மின் இணைப்பில் உள்ள மின் மோட்டார்களின் தற்போதைய குதிரைத் திறன் மற்றும் இணைப்புதாரர் பெயர், முகவரி, மின் இணைப்பின் பாலிசி எண் முதலான தகவல்களை தக்க ஆதாரத்துடன் வரும் 05-03-2010 தேதிக்குள் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தவறுபவர்கள் சிறு விவசாயிகளின் கீழ் இது நாள் வரை பெற்று வரும் சலுகைகளை இழப்பதுடன், இதர விவசாயிகளுக்கான மின் கட்டண வழிமுறைக்கு மாற்றப்படுவார்கள் என அறிவுறுத்தப் படுகிறார்கள்.*

இவண்,

***கண்காணிப்பு ப்பொறியாளர்-I***